பத்திரிக்கை செய்தி

தீயணைப்புத்துறை சான்றிதழ் வழங்க ரூ.10,000/- லஞ்சம் கேட்டு வாங்கிய நிலைய தீயணைப்பு அதிகாரி கைது

புகார்தாரர் திரு.அஜீஸ், ராமபுரம், சென்னையில் அழகுநிலையம் தொடங்குவதற்காக தீயணைப்புத்துறை சான்றிதழ் கோரி ஆன்லைன் மூலமாக விண்ணப்பித்துள்ளார். விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து மேல் நடவடிக்கை எடுக்க திரு.இளங்கோவன், நிலைய தீயணைப்பு அதிகாரி, வளசரவாக்கம், சென்னை அவர்கள் தனக்கு ரூ.25,000/- லஞ்சமாக தர வேண்டும் என வற்புறுத்தியுள்ளார். பின் லஞ்ச பணத்தை ரூ.10,000/- ஆக குறைத்துகொண்டு கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை சென்னை நகரப்பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 11.09.2025, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.இளங்கோவன், நிலைய தீயணைப்பு அதிகாரி அவர்களின் அறிவிரைப்படி திரு.முனுசாமி, தீயணைப்பு வீரர், லஞ்ச பணம் ரூ.10,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் இருவரும் கைது செய்யப்பட்டனர்.